# இணையத் தள ஊடுருவல்காரர்கள்

# வெ.23.61 கோடி பிணைப்பணம் கேட்கின்றனரா?

# கோலாலம்பூர் மாநகர் மன்றம் மறுப்பு




**கோலாலம்பூர், மே 21-**

**பல இணையத் தொடர்புமுறைகளில் இடையூறு ஏற்படுத்தியிருக்கும் இணைய ஊடுருவல்காரர்கள் ஐந்து கோடியே ஐம்பது லட்சம் அமெரிக்க டாலர் (23 கோடியே 61 லட்சத்து 70 ஆயிரம் மலேசிய வெள்ளி) பிணைப்பணம் கேட்டு வருவதாகக் கூறப்படுவதை கோலாலம்பூர் மாநகர் மன்றம் நேற்று மறுத்தது.**

பக்கம் 13

## கோலாலம்பூர் மாநகர் மன்றம் மறுப்பு

இணையத் தொடர்பு முறையில் சில இடையூறுகள் ஏற்பட்டுள்ளன என்பது உண்மைதான். ஆனால், எவரும் பணமும் கேட்கவில்லை. பிணைப் பணமும் கேட்கவில்லை என்று மாநகர மேயர் மைமூனா ஷரிப் குறிப்பிட்டார்.

அச்சம்பவம் தொடர்பில் தங்களுக்கு எந்தப் புகாரும் கிடைக்கவில்லை என்று கோலாலம்பூர் போலீஸ் தலைவர் ருஸ்டி இசா தெரிவித்தார்.

கோலாலம்பூர் மாநகர் மன்றத்தின் இணையத் தொடர்புமுறையில் சில விஷமிகள் இடையூறுகளை ஏற்படுத்தியிருக்கின்றனர் என்றும் அந்நபர்கள் ஐந்து கோடியே ஐம்பது லட்சம் அமெரிக்க டாலர் பிணைப் பணம் கோரியிருக்கின்றனர் என்றும் செராஸ் நாடாளுமன்ற உறுப்பினரான டான் கோக் வாய் முன்னதாகக் கூறியிருந்தார்.

அத்தகவல் நம்பகமான ஒரு வட்டாரத்திலிருந்து தமக்கு கிடைத்துள்ளதாகவும் டானை மேற்கோள்காட்டி சைனா பிரஸ் பத்திரிகை தெரிவித்திருந்தது.

கோலாலம்பூர் மாநகர் மன்றத்தின் பல இணையச் சேவைத் தொடர்புகளுக்கு இடையூறு ஏற்பட்டிருப்பதால், பொதுமக்களுக்கான சேவை பாதிக்கப்பட்டுள்ளது.

அதற்கு படிப்படியாக தீர்வு காணப்பட்டு வருகிறது என்று மைமூனா கூறினார்.

இணையச் சேவைகளில் ஏற்பட்டுள்ள இடையூறு நீண்ட நேரமாக நீடித்து வருவதால், வர்த்தகம் சம்பந்தப்பட்ட முக்கிய பிரிவுகளில் நேர்முகமான நடவடிக்கைகளைத் தொடங்கும்படி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் மாநகர் மன்றத்தை வலியுறுத்தி வருகின்றனர்.

மாநகர் மன்றத்தின் பொது அறிவிக்கைகளின்படி பார்க்குமிடத்து இப்பிரச்சினை மூன்று வாரங்களுக்கு முன்பே தொடங்கி விட்டதாகத் தெரிகிறது.